முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

OS.No.677/2019 பெயர் : ஆறுமுகம் நாள் : 17.03.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் எலவமலை கிராமம், மூலப்பாளையம் பிரிவில் குடியிருந்து வருகிறேன். வாதிகளின் ஒருசிலர் எலவமலை கிராமம், மூலப்பாளையத்திலும், ஒருசிலர் வெளியூரிலும் குடியிருந்து வருகிறார்கள். வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள் எனக்கு எவ்வகையில் உறவு என்றால், அவர்கள் எனக்கு சொந்தம் இல்லை. எனது தகப்பனார் பெயர் அம்மாசை. அவரது அப்பா பெயர் புருங்கான் என்கிற ரெங்கசாமி. என் தாத்தா உயிரோடு இல்லை. என் பெரியப்பா சின்னராமசாமி காலமாகிவிட்டார். அவரது வாரிசுகள் தான் செல்லமுத்து, கண்ணம்மாள், ராசாத்தி, நாகம்மாள் ஆகியோர் என்றால், சரிதான். அவர்களில் மாரிமுத்து, கண்ணம்மாள் உயிருடன் இல்லை. சின்னராமசாமி வாரிசுகளும், அம்மாசி வாரிகளும் சேர்ந்து 14.11.2013-ம் தேதியில் ஒரு பாகப்பிரிவினை ஆவணம் எழுதிக் கொண்டோம் என்றால், சரிதான். அதில் கண்டுள்ள சொத்துக்கள் புருங்கான் என்ற ரெங்கசாமிக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால், சரிதான். புருங்கான் என்ற ரெங்கசாமி உயிரோடு இருந்தபோது பாகக்கறார் செய்தோமா, அல்லது அவர் இறந்தபிறகு பாகக்கறார் செய்தோமா என்றால், அவர் உயிருடன் இருந்தபோதே பிரித்துக் கொடுத்து விட்டார். பாகக்கறார் பத்திரித்தில் அவர் உயிருடன் இருந்தபோது பிரித்துக் கொடுத்துவிட்டார் என்ற சங்கதி கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால், இல்லை. இந்த பாகக்கறார் பத்திரம் எழுதியபோது, அவர் உயிருடன் இல்லை. இந்த பத்திரம் எழுதிய போது, அவருடைய இறப்பு சான்றிதழோ, வாரிசு சான்றிதழோ வைத்து எழுதப் படவில்லை என்றால், சரிதான். இறந்துபோன புருங்கான் என்ற ரெங்கசாமிக்கு சின்னராமசாமி மற்றம் அம்மாசை மட்டுமே வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால், இல்லை. இறப்பு சான்றிதழும், வாரிசு சான்றிதழும் பதிவு அலுவலகத்தில்

காட்டாமல் தான் பாகக்கறார் பத்திரம், எழுதி பதிவு செய்துள்ளீர்கள் என்றால், சரிதான். தாவா சொத்துக்கள் இல்லாமல், வேறு சொத்துக்கள் புருங்கான் என்ற ரெங்கசாமிக்கு உள்ளதா என்றால், நிறைய சொத்துக்கள் உள்ளது. அதில் சின்னராமசாமி குடும்பமும், பெரியராமசாமி குடும்பமும் விற்பனை செய்துவிட்டார்கள் என்றால், பெரியராமசாமி குடும்பம் விற்பனை செய்துவிட்டார்கள். அதில் சின்னராமசாமி குடும்பமும் சிறிது சொத்தை விற்று விட்டார். எனது தகப்பனார் அம்மாசை அவருக்குரிய சொத்தை விற்பனை செய்யவில்லை என்றால், சரிதான். என் எதிர்வழக்குரையில் இன்னும் சொத்துக்கள் எங்கெங்கு உள்ளது பற்றிய விபரங்களை குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. வழக்கு சொத்தை தவிர இதர சொத்துக்கள் எங்கு உள்ளது, எந்த சர்வே எண்ணில் உள்ளது போன்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. எதிர்வழக்குரையில் அவசிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என குறிப்பிட்டுள்ளேன், அவசிய தரப்பினர்கள் யார் யார் என கூறியுள்ளேனா என்றால், இல்லை, பெரியராமசாமி, சின்னராமசாமி, நாகம்மாள், அம்மாசை. இவர்கள் நால்வரும் புருங்கான் என்ற ரெங்கசாமியின் வாரிசுகள் என்றால், சரிதான். நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட பாகக்கறார் பத்திரத்தில் பெரியராமசாமி மற்றும் நாகம்மாளை தரப்பினராக சேர்க்காமல் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான், ஆனால் அவர்கள் அவர்களது பாகத்திற்கு வந்த சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார்கள். பெரியராமசாமிக்கும், நாகம்மாளுக்கும் எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று எதிர்வழக்குரையில் குறிப்பாக கூறவில்லை என்று சொன்னால், சரிதான், ஆனால் அவர்கள் சொத்துக்களை விற்று சென்று விட்டார்கள். யாருக்கு விற்றார்கள், எப்போது விற்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**